## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.37/2023

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 14.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஜெயராஜ் (PW–2 ) | வயது | : | 47 /2025 |
| த/க பெயர் | : | திரு. கணேசன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | மேலநத்தம் | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. லட்சுமிபிரபா என்பவர் இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் பேர் தெரியாது ஆனால் அவரது சொத்திற்கு வடபுறத்தில் உள்ள நபர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. பிரதிவாதி என்ன பிரச்சனை செய்கிறார் என்றால் வாதி அவரது இடத்தை அளந்து வேலி போடும்போது தடை செய்தார். அந்த இடத்தை பிரதிவாதியானவர் பாதையாக பயன்படுத்துவதால் தான் வேலி போட தடை செய்தார் என்றால் சரியல்ல. 01.02.2023 அன்று வாதி வேலி வைக்க முயற்சி செய்தபோது பிரதிவாதியானவர் தாவா சொத்தை விட்டு வெளியேற சொல்லியதால் வெளியேறிவிட்டார்கள் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. தாவா சொத்தை பிரதிவாதியானவர் பாதையாக பயன்படுத்தி வருவதை வேலி போட்டு அடைக்க முயற்சி செய்ததால் தான் பிரதிவாதியானவர் தடுத்தார் என்றால் சரியல்ல. 17.02.2023 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளதால் எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் மன்னார்குடி தாலுக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. வேறு எந்த காவல் நிலையத்திலும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

4. நான் சொல்வதுபோல் எந்த வித சம்பவமும் நடக்கவில்லை என்றும், வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் எந்த ஊரில் குடியிருக்கிறேன் என்றால் மேல நத்தம். தாவா சொத்திற்கும் மேலநத்தத்திற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு இருக்கும் என்றால் 15 கிலோ மீட்டர் இருக்கும். தாவா சொத்து இருக்கும் இடம் எனக்கு தெரியாது என்றும், வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.18 10:10:51 +0530

District Munsif

Mannargudi.